# மதுரை மாநகராட்சி

# மாண்புமிகு மேயர் தலைமையில் நடைபெற்ற

# 32வது மாமன்ற கூட்டத்தின் தீர்மானங்கள்

# 24.10.2024ம் தேதி நேரம்: காலை: 10.30 மணி

**1. H4/011943/2024**

மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண் 33 எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் மற்றும் ஆமினி பேருந்துநிலையம் 13 எண்ணிக்கையிலான பொது கழிப்பிடங்களை 24 மணி நேரத்திற்கு ஒரு வருட காலத்திற்கு பராமரித்து, "இலவசமாக" பொது மக்களுக்கு பயன்பாட்டிற்கு வழங்கிட விலைப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டு M/s.FACILE SOLUTIONS, Madurai நிறுவனத்திற்கு இலவசமாக பராமரிப்பு செய்ய 13 கழிப்பிடங்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 6,14,100/- என்ற விலைவிகிதங்களில் வழங்கியமைக்கும் மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 658**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**2. H4/000402/2019**

மதுரை மாநகராட்சி அனைத்து வார்டு பகுதிகளில் பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் அச்சுறுத்தும் வகையிலும், சுகாதார கேடு, பல்வேறு தொற்று நோய்களை ஏற்படுத்தும் வகையிலும் சாலைகளில் சுற்றித்திரியும் பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே பொது சுகாதார அத்தியாவசிய அவசியம் கருதி மதுரை மாநகராட்சி பகுதியில் சுற்றித் திரியும் பன்றிகளை அப்புறப்படுத்தும் பணிகள் மேற்கொள்ள உரிய நிறுவனம் தேர்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 659**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**3 ம2உ_3/004143/2024**

மதுரை மாநகராட்சி, மண்டலம்- 2 (வடக்கு), வார்டு எண். 33க்குட்பட்ட மாட்டுத்தாவணி ஆம்னி பேருந்து நிலையத்தில் தற்போது போதிய வெளிச்சம் இல்லாமல் இருப்பதால், பாரதியார் பூங்காவில் தற்போது உபயோகமில்லாமல் உள்ள 12.5 மீட்டர் உயரம் கொண்ட உயர் கோபுர கம்பத்தில் உள்ள Trailing Cable, Steel Roop மற்றும் 350 W LED விளக்குகள் 9 Nos

ஆகியவைகளை புதுப்பித்து Dueal Timer அமைக்க ரூ.3.40 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

எனவே, இம்மதிப்பீட்டு பணிக்கு ரூ.3.40 இலட்சத்தை ஒதுக்கீடு செய்ய திருத்திய மதிப்பீட்டில் சேர்ப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 660**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**4.ந.க.எண்.ஓ4/010839/2024**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 9 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 15 மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் பள்ளி மாணவர்களின் விளையாட்டு திறனை ஊக்குவிக்கும் பொருட்டும், பள்ளியின் நலன் கருதியும் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் 2024 – 2024ஆம் கல்வியாண்டில் பத்து (10) உடற்கல்வி ஆசிரியர்களை 07.10.2024 முதல் 03.01.2025 வரை 89 நாட்கள் மட்டும் பணியமர்த்தி கொள்வதற்கும், அன்னார்களுக்கு ஒரு நபருக்கு மாதாந்திர மதிப்பூதியமாக ரூ.10,000/- என்ற அடிப்படையில் வழங்குவதற்கும்,

மேற்காணும் விவரப்படி 10 நபர்களுக்கு மதிப்பூதியம் வழங்குவதால் ஏற்படும் உத்தேச செலவினத் தொகையான ( நாள் ஒன்றுக்கு ரூ.333 x 89 நாட்கள் x 10 நபர்கள் ரூ.2,96,370/- (ரூபாய் இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து முந்நூற்று எழுபது மட்டும்)யை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து வழங்குவதற்கும், மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 661**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**5.E6/Est.No.601/24-25**

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட கீழ்கண்ட விவரப்படியான மதிப்பீட்டு பணிக்கு பொது நிதியின் கீழ் 2023-2024 விலை விகிதப்படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு கடந்த 09.10.2024ம் தேதி டெண்டர் வரவழைக்கப்பட்டுள்ளது மேலும் கடந்த 01.08.2024ம் தேதி ஆணையாளர் அவர்களின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| S.No | கோப்பு எண் / பணி விவரம் | மதிப்பீட்டு தொகை (Rs.in Lakhs) |
|---|---|---|
| **1** | E6/Est.No.601/24-25<br>மதுரை மாநகராட்சி மண்டலம்–**2** வார்டு எண்–**31**ல் உள்ள தமுக்கம் மெயின் சாலையில் அமைந்துள்ள தமுக்கம் மாநாட்டு மையம் வளாகத்தில் மேம்பாடு பணி தொடர்பாக | **95.00** |

மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட விபரம் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 662**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**6. E6/Est.No.602/24-25**

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட கீழ்கண்ட விவரப்படியான மதிப்பீட்டு பணிக்கு பொது நிதியின் கீழ் 2023-2024 விலை விகிதப்படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு கடந்த 09.10.2024ம் தேதி டெண்டர் வரவழைக்கப்பட்டுள்ளது மேலும் கடந்த 01.08.2024ம் தேதி ஆணையாளர் அவர்களின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| S.No | கோப்பு எண் / பணி விபரம் | மதிப்பீட்டு தொகை (Rs.in Lakhs) |
|---|---|---|
| **1** | E6/Est.No.602/24-25<br>மதுரை மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண்–31ல் உள்ள தமுக்கம் மெயின் சாலையில் அமைந்துள்ள தமுக்கம் மாநாட்டு மையம் வளாகத்தில் மேம்பாடு பணி தொடர்பாக | **87.00** |

மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட விபரம் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 663**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**7. E6/003580/2022**

மதுரை மாநகராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (CLC) நிறுவனம் மூலம் வெளிக்கொணர்வு அடிப்படையில் 01.07.2022 முதல் கணினி 73–நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு தற்பொழுது நாள் ஒன்றுக்கு தினக்கூலி ஊதியம் ரூ.755/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களின் ஒப்பந்த காலம் 31.10.2024 முடிவடைய உள்ளது.

மேலும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று இரண்டு கணினி ஒப்பந்த பணியாளர்கள் (01.09.2024 மற்றும் 01.10.2024 முதல்) பணி புரிந்து வருகின்றனர். இவர்களையும் சேர்த்து ஆக மொத்தம் 75 ஒப்பந்த கணினி பணியாளர்களை 01.11.2024 முதல் 31.01.2025 வரை ஒப்பந்த காலத்தினை நீட்டிப்பு செய்வதற்கும் இந்த ஒப்பந்ததை கால நீட்டிப்பு செய்வதால் மதுரை மாநகராட்சிக்கு கீழ்க்கணடவாறு செலவினம் ஏற்படுகிறது.

| One man power / per month (30 Days) (22650 X 75) | EPF minimum (Rs.15000 X 75=1125000* 13%) | ESI 3.25% (683 X75) | SUB TOTAL | Service Charge (2%) | 75 Man power / per months | Total Salary 75* 3 months |
|---|---|---|---|---|---|---|
| **1698750** | **146250** | **51225** | **1896225** | **37925** | **1934150** | **5802450** |

எனவே மேற்கண்ட உத்தேச செலவினம் ரூ.**58,02,450**/-ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும், **01.11.2024** முதல் **31.01.2025** வரை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (CLC) வெளிக்கொணர்வு நிறுவனத்திற்கு ஒப்பந்த காலத்தினை நீட்டிப்பு செய்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 664**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**8. E3/017251/21**

மதுரை மாநகராட்சியில் முன்னாள் இராணுவத்தினர் கழகத்தை சார்ந்த TEXCO ஒப்பந்த பணியாளர்கள் எட்டு நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களின் ஒப்பந்த பணிக்காலம் 31.10.2024ல் முடிவடைய உள்ளது.

இந்நிலையில் தற்போது பணிபுரிந்து வரும் எட்டு TEXCO பணியாளர்களின் சப்ளை உத்தரவு காலத்தினை 01.11.2024 முதல் 31.03.2025 வரை ஐந்து மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்து வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 665**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**9.J1/MSCL/21705/2017**

மதுரை மாநகராட்சி ஸ்மார்ட்சிட்டி திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சியின் வைகை வடகரையில் அமைந்துள்ள இணைக்கப்பட்ட வார்டு பகுதியில் உள்ள பாதாள சாக்கடைகளை மேம்படுத்திடும் பொருட்டு ஸ்மார்ட்சிட்டி திட்டத்திற்காக நடைபெற்ற 10–வது உயர்மட்ட குழுவில் ரூ.291.37–கோடிக்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டும் பின்னர் RocNo.25477/2017/DO2 18.10.2019–ந் தேதிய கடிதத்தில் இத்திட்டத்தினை மூன்று சிப்பங்களாக வகுத்து செயல்படுத்திடும் பொருட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது.

இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டில் ஸ்மார்ட்சிட்டி நிதியிலிருந்து ரூ.247.90–கோடியும், இத்திட்டத்தின் மூலம் புதியதாக வழங்கப்படும் பாதாள சாக்கடை வீட்டிணைப்பு வைப்புத்தொகையிலிருந்து ரூ.43.47–கோடியும் செலவிட வேண்டும் என மாமன்ற தீர்மான எண் 667 நாள் : 26.09.2019 மூலம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும் மதுரை மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியுடன் கடந்த 2011-ம் ஆண்டு இணைக்கப்பட்ட வார்டுப் பகுதிகளில் வைகை ஆற்றின் தென்கரைப் பகுதிகளில் இணைக்கப்பட்ட வார்டுப் பகுதிகளுக்கு புதியதாக பாதாள சாக்கடை அமைப்பினை ஏற்படுத்தவும், வைகையாற்றின் வடகரைப் பகுதிகளல் விடுபட்ட பகுதிகளுக்கும், புதியதாக விரிவாக்கமடையும் பகுதிகளுக்கும், மதுரை மாநகரில் உள்ள கழிவு நீரேற்று நிலையங்களை சீரமைக்கவும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதிபங்களிப்பு, மற்றும் TNUIFSL-நிறுவனம் மூலம் மானியம் மற்றும் கடன் ஆகியவற்றின் உதவியுடன் அம்ரூத் 2.0 திட்டம் தொடக்க நிலைக்கான நடவடிக்கையில் இருந்து வருகிறது.

இவ்வாறு திட்டப்பணிகளுக்காக மாநகராட்சி நிர்வாகம் TUFIDCO மற்றும் TNUIFSL ஆகிய நிறுவனங்களிடம் இருந்து பெறப்படும் கடன்தொகையானது ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் வரிவிகிதத்தினை குறைந்தபட்சம் 10 % உயர்த்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையிலேயே கடன் தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது.

மதுரை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் அனைத்தும், மாநகராட்சியின் பங்குத்தொகையின் பங்களிப்பின் கீழ் செயல்பட்டு வருகிறது, மற்றும் திட்டப்பணிகளில் தொழில்நுட்பத்தின் காரணமாக ஏற்படும் கூடுதல் செலவினங்களும் மாநகராட்சியின் பங்களிப்பில் இருந்தே செலவினம் மேற்கொள்ள வேண்டிய சூழல் உருவாகிறது.

தற்போது மாநகராட்சியில் புதிய பாதாள சாக்கடை இணைப்பிற்காக சுவான்தாரர்களிடமிருந்து வசூல் செய்யப்படும் கட்டணமானது அரசாணை எண்.213 நகராட்சி

நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மா.ந.2) நாள் : 31.12.2003 மற்றும் மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.109 நாள் : 30.06.2009–ன்படியும் திருத்தம் செய்யப்பட்ட கட்டணம் ஆகும்.

ஏறத்தாழ 15-ஆண்டுகளாக பாதாள சாக்கடை கட்டணம் திருத்தம் செய்யப்படாமல் இருந்து வருவதாலும் ஏற்கனவே நடைபெற்று முடிந்த பல்வேறு திட்டப்பணிகளுக்காக மதுரை மாநகராட்சி TUFIDCO மற்றும் TNUIFSL ஆகிய நிறுவனங்களிடம் பெற்ற கடன்தொகைகள் மாநகராட்சிக்காக அரசு ஒதுக்கப்படும் நிதிகளில் இருந்து பிடித்தம் செய்யப்படுவதாலும், முடிவுற்ற திட்டப்பணிகளின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கும் (Operation and Maintenance), பல்வேறு திட்டப்பணிகளுக்கு மாநகராட்சியின் பொது நிதியில் இருந்தே செலவினம் மேற்கொள்வதாலும் தற்போது மதுரை மாநகராட்சி நிதிச்சுமைக்கு ஆளாகும் நிலை உருவாகிறது.

இதன் காரணமாக தற்போது திட்டப்பணிகளை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர்களுக்கு மாநகராட்சியின் பங்குத்தொகையில் இருந்து வழங்க வேண்டிய தொகையை வழங்கிட போதிய நிதியின்மையின் காரணமாக வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே புதிய பாதாளசாக்கடை இணைப்பிற்கான கட்டணங்களை திருத்தியமைப்பது தொடர்பாக பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

<table>
<tr><th rowspan="3">கட்டிடத்தின் தன்மை (சதுர அடியில்)</th><th colspan="4">வைப்புத்தொகை விபரம்</th><th colspan="4">இணைப்பிற்கான மாதாந்திர கட்டணம்</th></tr>
<tr><th colspan="2">வீட்டிணைப்பு</th><th colspan="2">தொழிற்சாலைகள் மற்றும் வணிக உபயோகம்</th><th colspan="2">வீட்டிணைப்பு</th><th colspan="2">தொழிற்சாலைகள் மற்றும் வணிக உபயோகம்</th></tr>
<tr><th>நடப்பு கட்டணம் ரூ.</th><th>திருத்தம் செய்யப்பட வேண்டிய கட்டணம் ரூ.</th><th>நடப்பு கட்டணம் ரூ.</th><th>திருத்தம் செய்யப்பட வேண்டிய கட்டணம் ரூ.</th><th>நடப்பு கட்டணம் ரூ.</th><th>திருத்தம் செய்யப்பட வேண்டிய கட்டணம் ரூ.</th><th>நடப்பு கட்டணம் ரூ.</th><th>திருத்தம் செய்யப்பட வேண்டிய கட்டணம் ரூ.</th></tr>
<tr><td>500 வரை</td><td rowspan="4">5000</td><td rowspan="4">5000</td><td rowspan="4">10000</td><td>15000</td><td rowspan="4">125</td><td rowspan="4">150</td><td rowspan="4">250</td><td>300</td></tr>
<tr><td>500 முதல் 1200 வரை</td><td>30000</td><td>400</td></tr>
<tr><td>1201 முதல் 2400 வரை</td><td>45000</td><td>600</td></tr>
<tr><td>2400–க்கு மேல்</td><td>60000</td><td>800</td></tr>
<tr><td colspan="9">2401 சதுரஅடிக்கு மேல் உள்ள பிளின்ட் பகுதிக்கான வைப்புத் தொகை மற்றும் கட்டணங்கள் அஸ்திவாரப் பகுதியின் அதிகரிப்பு ஏற்றவாறு அதிகரிக்கப்படும்</td></tr>
</table>

தற்போது ஸ்மாா்ட்சிட்டி திட்டத்தின் கீழ் வைகை வடகரையில் அமைந்துள்ள இணைக்கப்பட்ட பகுதியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடைகளை மேம்படுத்திடும் மூன்று சிப்பபணிகளும் இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலையில் வீடுகளுக்கு இணைப்பு வழங்க ஏதுவாக கழிவுநீர் குழாய்கள் சுவான்தாரர்களின் வீடுகளின் எல்லை வரை ஒப்பந்ததாரரால் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேற்காணும் சுவான்தாரர்களுக்கு இணைப்பு வழங்கிடும் பொருட்டு **புதிய துணைவிதிகள் அமலுக்கு வரும் வரை** தற்போது நடைமுறையில் இருந்து வரும் புதிய பாதாள சாக்கடை வீட்டு இணைப்பிற்கான **மேற்பார்வை கட்டணம் ரூ.500.00 விண்ணப்ப கட்டணம்**

**ரூ.100.00 மற்றும் பங்களிப்பு தொகை ரூ.5000.00 மற்றும்** வணிக இணைப்பிற்கான **மேற்பார்வை கட்டணம் ரூ.500.00 விண்ணப்ப கட்டணம் ரூ.100.00, மற்றும் பங்களிப்பு தொகை ரூ.10,000.00** ஆகியவற்றை செலுத்தும் சுவான்தாரர்களுக்கு பாதாளசாக்கடைக்கான வீட்டு இணைப்பு வழங்கிடவும்

மேலும் மேற்கண்ட பகுதிகளில் புதியதாக வரப்பெற்றுள்ள குடியிருப்புகளுக்கு மாநகராட்சியின் பாதாள சாக்கடை இணைப்புகளுக்கான பொதுவான அலுவலக நடைமுறைகளை பின்பற்றி புதிய இணைப்பு வழங்கிடவும், பாதாள சாக்கடை தொடர்பான புதிய துணைவிதிகள் தயாரித்து அரசின் ஒப்புதல் பெறுவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 666**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**<u>10. ஈ2/மதி4/009589/2024</u>**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மண்டலம்.4 – வார்டு எண்.41 – அனுப்பானடி கிராமம் – சர்வே எண்.2/11B1-ல் 0.59 ஏக்கர் (2421.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ), மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை அவர்களின் ந.க.எண்.30207/2024/SWP/O4OG0322/2024/TCP நாள்.29.07.2024-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மண்டலம்.4 – வார்டு எண்.41 – அனுப்பானடி கிராமம் – சர்வே எண்.2/11B1-ல் 0.59 ஏக்கர் (2421.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைக்கான இடம் **<u>I வது (1-1) சாலையானது 9.00 மீட்டர் அகலம் (30 அடி சாலையாகவும்) மூலை முடக்குகள் உட்பட மொத்தம் 428.89 சதுர மீட்டர் இடத்தினையும் பத்திரம் எண் : 2916/2024 நாள்.10.07.2024-ம் தேதியில்</u>** மதுரை மாவட்டம், மதுரை தெற்கு 1நிர் இணை சார்பதிவாளர் அலுவலகம், மதுரை தெற்கு தாலுகா, அனுப்பானடி கிராமம் ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் தார்சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்ததற்கும் காலிமனை வரிவிதித்ததற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 667**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**11. ஈ2/மதி1/010966/2024**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மண்டலம்.1 – வார்டு எண்.09– உத்தங்குடி கிராமம் – UDR சர்வே எண்.181/3B-ல் 53.0 சென்ட் (2145.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ), மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை அவர்களின் ந.க.எண்.13974/2023/SWP/379J8K8X/2023/TCP நாள்.11.10.2023-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மண்டலம்.1 – வார்டு எண்.09– உத்தங்குடி கிராமம் – UDR சர்வே எண்.181/3B-ல் 53.0 சென்ட் (2145.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைக்கான இடம் **I வது (1-1) சாலையானது 7.20 மீட்டர் அகலம் (23 அடி சாலையாகவும்) மூலை முடக்குகள் உட்பட மொத்தம் 487.98 சதுர மீட்டர் இடத்தினையும் பத்திரம் எண் : 3958/2023 நாள்.05.09.2023-ம் தேதியில் மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடம் 15.92 சதுர மீட்டர் பத்திரம் எண் : 3958/2023 நாள் : 05.09.2023-ம் தேதியில்** மதுரை டி மதுரை வடக்கு ரிடி ஒத்தக்கடை சப்டி தற்போது 1 எண் இணை சார்பதிவாளர் மதுரை வடக்கு சப்டி மதுரை வடக்கு வட்டமாக இருந்து தற்போது மதுரை கிழக்கு வட்டம் 88 நிர் உத்தங்குடி கிராமம், ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் தார்சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்ததற்கும் காலிமனை வரிவிதித்ததற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 668**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**12. ஈ2/மதி5/002019/2024**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மண்டலம்.5 – வார்டு எண்.93 – திருப்பரங்குன்றம் வட்டம், புதுக்குளம் 2வது பிட் கிராமம் – சர்வே எண்.18/1A1-ல் 0.82 ஏக்கர் (3343.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ), மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை அவர்களின் ந.க.எண்.15711/2023/SWP-

D86Y3544 /2023/TCP நாள்.02.12.2023-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மண்டலம்.5 – வார்டு எண்.93 – திருப்பரங்குன்றம் வட்டம், புதுக்குளம் 2வது பிட் கிராமம் – சர்வே எண்.18/1A1-ல் 0.82 ஏக்கர் (3343.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைக்கான இடம் **I வது (1-1) சாலையானது 9.00 மீட்டர் அகலம் (30 அடி சாலையாகவும்) II வது (2-2) சாலையானது 7.20 மீட்டர் அகலம் (23 அடி சாலையாகவும்) III வது (3-3) சாலையானது 7.20 மீட்டர் அகலம் (23 அடி சாலையாகவும்)மூலை முடக்குகள் உட்பட மொத்தம் 976.27 சதுர மீட்டர் இடத்தினையும் பத்திரம் எண் : 7894/2023 நாள்.21.11.2023-ம் தேதியில் மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடம் 19.52 சதுர மீட்டர் பத்திரம் எண் : 7894/2023 நாள் : 21.11.2023-ம் தேதியில்** மதுரை மாவட்டம், மதுரை தெற்கு பதிவு மாவட்டம், திருப்பரங்குன்றம் சப்டிக்கு சேர்ந்த திருப்பரங்குன்றம் தாலுகா, புதுக்குளம் பிட் 2 கிராமம், ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் தார்சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்ததற்கும் காலிமனை வரிவிதித்ததற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 669**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**13.ஈ2/மதி1/002373/2024**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மண்டலம்.1 – வார்டு எண்.40 – வண்டியூர் 2வது பிட் கிராமம் – U.D.R சர்வே எண்.2/1A3, 2/1B1A-ல் 0.32 ஏக்கர் (1300.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ), மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை அவர்களின் ந.க.எண்.12490/2023/SWP/592GG2UO/2023/TCP நாள்.04/10/2023-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மண்டலம்.1 – வார்டு எண்.40 – வண்டியூர் 2வது பிட் கிராமம் – U.D.R சர்வே எண்.2/1A3, 2/1B1A-ல் 0.32 ஏக்கர் (1300.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைக்கான இடம் **I வது (1-1) சாலையானது 7.20**

**மீட்டர் அகலம் (23 அடி சாலையாகவும்) II வது (2-2) சாலையானது 7.20 மீட்டர் அகலம் (23 அடி சாலையாகவும்) மூலை முடக்குகள் உட்பட மொத்தம் 370.93 சதுர மீட்டர் இடத்தினையும் பத்திரம் எண் : 5926/2023 நாள்.18.08.2024-ம் தேதியில் மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடம் 9.00 சதுர மீட்டர் பத்திரம் எண் : 5926/2023 நாள் : 18.08.2024-ம் தேதியில்** மதுரை மாவட்டம், மதுரை வடக்குப்பதிவு மாவட்டம் தெப்பக்குளம் உ.ப-பதிவு மாவட்டம், தற்போது கருப்பாயூரணி உ.ப-பதிவு மாவட்டம், மதுரை வடக்கு வட்டம் தற்போது மதுரை கிழக்கு வட்டம் வண்டியூர் கிராமம் 2வது பிட், ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் தார்சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்ததற்கும் காலிமனை வரிவிதித்ததற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 670**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**14. ஈ2/மதி5/007335/2024**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மண்டலம்.5 – வார்டு எண்.73 – மாடக்குளம் கிராமம் – டவுன் சர்வே எண்.11/9, 11/13-ல் 0.243 ஏக்கர் (984.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ), மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை அவர்களின் ந.க.எண்.26406/2024/SWP/F2RLIJIV/2024/TCP நாள்.12/06/2024-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மண்டலம்.5 – வார்டு எண்.73 – மாடக்குளம் கிராமம் – டவுன் சர்வே எண்.11/9, 11/13-ல் 0.243 ஏக்கர் (984.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைக்கான இடம் **I வது (1-1) சாலையானது 7.00 மீட்டர் அகலம் (23 அடி சாலையாகவும்) மூலை முடக்குகள் உட்பட மொத்தம் 14.13 சதுர மீட்டர் இடத்தினையும் பத்திரம் எண் : 5490/2024 நாள்.30.05.2024-ம் தேதியில் மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடம் 13.37 சதுர மீட்டர் பத்திரம் எண் : 5490/2024 நாள் : 30.05.2024-ம் தேதியில்** மதுரை மாவட்டம், மதுரை தெற்குப்பதிவு மாவட்டம் மதுரை தெற்கு 4ம் நிர் இணை சார் பதிவகம், முன்னர் மதுரை தெற்கு வட்டம் தற்போது திருப்பரங்குன்றம் வட்டம், மாடக்குளம் கிராமம், ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் தார்சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம்

ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்ததற்கும் காலிமனை வரிவிதித்ததற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 671**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**15.ஈ2/மதி5/009847/2024**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மண்டலம்.5 – வார்டு எண்.73 – மாடக்குளம் கிராமம் – டவுன் சர்வே எண்.12/1-ல் 1.36 ஏக்கர் (5506.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ), மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை அவர்களின் ந.க.எண்.23679/2024/SWP/J44JRS2Z/2024/TCP நாள்.30/07/2024-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மண்டலம்.5 – வார்டு எண்.73 – மாடக்குளம் கிராமம் – டவுன் சர்வே எண்.12/1-ல் 1.36 ஏக்கர் (5506.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைக்கான இடம் **I வது (1-1) சாலையானது 9.00 மீட்டர் அகலம் (30 அடி சாலையாகவும்) II வது (2-2) சாலையானது 9.00 மீட்டர் அகலம் (30 அடி சாலையாகவும்) III வது (3-3) சாலையானது 7.20 மீட்டர் அகலம் (23 அடி சாலையாகவும்) IV வது (4-4) சாலையானது 9.00 மீட்டர் அகலம் (30 அடி சாலையாகவும்) V வது (5-5) சாலையானது 7.20 மீட்டர் அகலம் (23 அடி சாலையாகவும்) VI வது (6-6) சாலையானது 9.00 மீட்டர் அகலம் (30 அடி சாலையாகவும்)மூலை முடக்குகள் உட்பட மொத்தம் 1924.90 சதுர மீட்டர் இடத்தினையும் பத்திரம் எண் : 5487/2024 நாள்.30.05.2024-ம் தேதியில் மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடம் 19.45 சதுர மீட்டர் பத்திரம் எண் : 5487/2024 நாள் : 30.05.2024-ம் தேதியில்** மதுரை மாவட்டம், மதுரை தெற்குப்பதிவு மாவட்டம் மதுரை தெற்கு 4ம் நிர் இணை சார் பதிவகம், முன்னர் மதுரை தெற்கு வட்டம் தற்போது திருப்பரங்குன்றம் வட்டம், மாடக்குளம் கிராமம், ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் தார்சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்ததற்கும் காலிமனை வரிவிதித்ததற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 672**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**16. ஈ2/மதி1/008581/2024**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மண்டலம்.1 – வார்டு எண்.09 – மங்களக்குடி கிராமம் – புல எண்.64/1ஏ-ல் 0.8475 ஏக்கர் (3430.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ), மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை அவர்களின் ந.க.எண்.28395/2024/SWP-EFYYKCWB/2024/TCP நாள்.09/07/2024-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மண்டலம்.1 – வார்டு எண்.09 – மங்களக்குடி கிராமம் – புல எண்.64/1ஏ-ல் 0.8475 ஏக்கர் (3430.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைக்கான இடம் **I வது (1-1) சாலையானது 7.20 மீட்டர் அகலம் (23 அடி சாலையாகவும்) II வது (2-2) சாலையானது 7.20 மீட்டர் அகலம் (23 அடி சாலையாகவும்) III வது (3-3) சாலையானது 7.20 மீட்டர் அகலம் (23 அடி சாலையாகவும்)மூலை முடக்குகள் உட்பட மொத்தம் 1022.18 சதுர மீட்டர் இடத்தினையும் பத்திரம் எண் : 2478/2024 நாள்.20.06.2024-ம் தேதியில் மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடம் 15.99 சதுர மீட்டர் பத்திரம் எண் : 2478/2024 நாள் : 20.06.2024-ம் தேதியில்** மதுரை மாவட்டம், மதுரை வடக்குப்பதிவு மாவட்டம் ஒத்தக்கடை உ.ப.பதிவு மாவட்டம் மதுரை வடக்கு வட்டம் தற்போது மதுரை கிழக்கு வட்டம், மங்களக்குடி கிராமம், ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் தார்சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்ததற்கும் காலிமனை வரிவிதித்ததற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 673**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**17. ம2உ_3/006766/2022**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 16.09.2022 அன்று மதுரையில் நடைபெற்ற "தோள் கொடுப்போம் தொழில்களுக்கு" மாநாட்டில் கலந்து கொண்டு "டைட்டல் மற்றும் மதுரை மாநகராட்சி இணைந்து ஒரு முன்னோடி டைட்டல் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்து, மதுரை மாநகரின் மையப்பகுதியான மாட்டுத்தாவணியில் இரண்டு கட்டங்களாக டைடல் பார்க் அமைக்க உத்தேசித்து முதற்கட்டமாக ரூ.600 கோடி திட்ட மதிப்பீட்டில் ஐந்து ஏக்கரில் டைடல் பார்க் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இரண்டாம் கட்டத்தில்,

இத்திட்டத்தின்படி மேலும் ஐந்து ஏக்கரில் டைடல் பார்க் பணிகள் இரட்டிப்பாக்கப்படும்" என அறிவித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் TIDEL PARK ரூ.600 கோடி செலவில் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகே உள்ள சர்வே வார்டு XVI, பிளாக் எண்.65, நகர நில அளவை எண் : 4/1(P), 4/2(P),5/1, 5/2 & 9/1(P), தல்லாகுளம் கிராமம், மதுரை வடக்கு தாலுகா என்ற முகவரியில் உள்ள மனையிடம் மதுரை டைடல் பார்க் திட்டத்திற்கு ஏற்ற இடமாக 12.12.2022 அன்று ACS Industries, IPSC துறை MDTIDCO மற்றும் MD TIDEL, மாவட்ட ஆட்சியர் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் ஆகியோர் ஆய்வு செய்து T.S.No.5/1 & 5/2-ல் சுமார் 5.60 ஏக்கர் நிலத்தை Phase-1 திட்டத்தில் செயல்படுத்துவதற்கு தீர்மானம் முன்மொழிந்துள்ளனர்.

தற்போது TIDEL PARK நிறுவனத்தினரிடம் இருந்து 30.07.2024 அன்று வரப்பெற்ற கடிதத்தில் ஏற்கனவே மாநகராட்சி மூலம் மாமன்ற தீர்மானம் எண்.254 நாள்.26.06.2023-ல் ஒப்புதல் பெற்று வழங்கியுள்ள T.S.No.5/1 & 5/2-ல் உள்ள 5.60 ஏக்கர் பரப்பளவு இடத்துடன் T.S.No.4/1 மற்றும் 4/2 அமைந்துள்ள 4.00 ஏக்கர் பரப்பளவு இடத்தினை கூடுதலாக வழங்கிடவும் மொத்தம் 9.60 ஏக்கர் பரப்பளவில் TIDEL PARK நிறுவ தேவையான ஒப்புதலை வழங்கிடுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே கீழ்க்கண்ட பரப்பளவிலான இடத்தினை TIDEL PARK அமைக்க வழங்குவதற்கான மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

| வ.எண் | நகரளவு எண் | பரப்பளவு | |
|---|---|---|---|
| | | ஏக்கர் | சென்ட் |
| 1 | 5/1 | 3 | 201/2 |
| 2 | 5/2 | 1 | 23 |
| 3 | 9/1 | 1 | 641/2 |
| 4 | 4/1 | 2 | 31 |
| 5 | 4/2 | 1 | 21 |
| மொத்தம் | | 9 ஏக்கர் 60 சென்ட் | |

**மாமன்ற தீர்மானம் எண்: 674**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**18. ம2உ_3/004227/2023**

மதுரை மாநகராட்சி மண்டலம் எண்.2 வார்டு எண்.32-க்கு உட்பட்ட சர்வே வார்டு.10 பிளாக் .76 நகர புல எண்.2829, 2009 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள இடம் நகரளவை ஆவணங்களில் மதுரை மாநகராட்சி ஆணையாளர் என பதிவு உள்ளதை தனிநபர் பெயரில் பட்டா மாற்ற திருத்தம் செய்ய மனுதாரர் திரு.R.காமாட்சி என்பவர் கோரியுள்ளார். மேற்படி புல எண்ணில் கணினி பதிவேடுகளில் தவறுதலாக சர்க்கார் புறம்போக்கு என உள்ளதாக கிராம நிர்வாக அலுவலர், துணை

வட்டாட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர் விசாரித்து அறிக்கை செய்துள்ளார்கள். மேற்காணும் இடம் முழுவதும் மதுரை மாநகராட்சி மூலம் விற்கப்பட்ட மனையாகும்.

மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் திரு. முத்துசாமி அய்யர் மகன் திரு.ராமலிங்கய்யர் என்பவருக்கு 22195 சதுர அடி இடமானது கிரைய ஆவண எண்.5926/1945-ன்படி கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி இடம் திரு.ராமலிங்கய்யர் என்பவர் திருமதி.கமலா என்பவருக்கு ஆவண எண்.5662/1950-ன்படி கிரையம் செய்யப்பட்டு பின்னர் பாகப்பிரிவினை திரு.அஸ்வின் மற்றும் திரு.நரேஷ் அவர்கள் ஆவண எண்.3414/2007-ல் செய்யப்பட்டு பொது அதிகார ஆவணம் மூலம் திரு.சுரேந்திரன் என்பவர் திரு.காமாட்சி என்பவருக்கு ஆவண எண்.992/2010-ன்படி 670.85 சதுர அடி இடம் கிரையமாக வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் இடத்தில் கட்டிடப்பணி செய்ய உறுப்பினர் செயலர் மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் ந.க.எண்.1374/2008/மதி3 நாள்.26.10.2009-ல் திரு.S.R.அஸ்வின் என்பவர் பெயரில் திட்ட அனுமதியும் மதுரை மாநகராட்சியில் இருந்து க.ம.எண்.502/2009 நாள்.05.11.2009-ல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பட்டாதாரர்கள் பெயரில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வரிவிதிப்பு செய்யப்பட்டு கட்டிடங்களில் மனை உரிமையாளர்கள் குடியிருந்து வருகிறார்கள்.

எனவே ஆவணங்களின் அடிப்படையிலும் 1945-ம் ஆண்டு முதல் 2010 வரை உள்ள கிரைய ஆவணங்களின்படியும் நகர புல எண்.2829 ஆனது பட்டா இடமாக உள்ளதை கிரையம் பெற்ற நபர்கள் இது நாள் வரை தங்கள் பெயருக்கு பட்டா மாற்றவில்லை. மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் விற்கப்பட்ட இடமாதலால் தற்போதைய சுவான்தாரர்கள் பெயர்களில் பட்டா மாறுதல் செய்ய தடையின்மை சான்று வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 675**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**19. ஈ2/மதி2/011429/2024**

மதுரை மாநகராட்சி – மத்திய திட்டம் – மண்டலம்.2 – வார்டு எண்.01– விளாங்குடி பிட் 2 கிராமம் – ரீசர்வே எண். 9/1B, 9/4B1, 9/4B2, 9/5A, 10/1, 10/2A, 10/2B, 10/3B, 10/4, 10/5A, 10/6A2, 10/6B, 10/6C1, 10/6C2-ல் 7.40 ஏக்கர் (29953.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க உத்தேச சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்பிற்கான இடத்தினை ஆணையாளர், மதுரை மாநகராட்சி பெயருக்கு பத்திர பதிவு செய்து அதன் அசல் ஆவணங்களுடன் உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர்(பொ), மதுரை மாவட்டம் நகர் ஊரமைப்பு அலுவலகம், மதுரை அவர்களின் ந.க.எண்.DAA5LO3V/2023-TCP1 நாள்.26.07.2023-ம் தேதிய செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ளது.

மேற்கண்ட மதுரை மாநகராட்சி, மத்திய திட்டம், மண்டலம்.2, வார்டு எண்.01 விளாங்குடி பிட் 2 கிராமம் – ரீசர்வே எண். 9/1B, 9/4B1, 9/4B2, 9/5A, 10/1, 10/2A, 10/2B, 10/3B, 10/4, 10/5A, 10/6A2, 10/6B, 10/6C1, 10/6C2-ல் 7.40 ஏக்கர் (29953.00 சதுர மீட்டர்) பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைக்கான இடம் **I வது (1-1) சாலையானது 12.00 மீட்டர் அகலம் (39 அடி சாலையாகவும்) II வது (2-2) சாலையானது 10.00 மீட்டர் அகலம் (33 அடி சாலையாகவும்) III வது (3-3) சாலையானது 10.00 மீட்டர் அகலம் (33அடி சாலையாகவும்) IV வது (4-4) சாலையானது 10.00 மீட்டர் அகலம் (33 அடி சாலையாகவும்) V வது (5-5) சாலையானது 10.00 மீட்டர் அகலம் (33 அடி சாலையாகவும்) VI வது (6-6) சாலையானது 9.00 மீட்டர் அகலம் (30 அடி சாலையாகவும்) VII வது (7-7) சாலையானது 9.00 மீட்டர் அகலம் (30 அடி சாலையாகவும்) VIII வது (8-8) சாலையானது 9.00 மீட்டர் அகலம் (30 அடி சாலையாகவும்) IX வது (9-9) சாலையானது 7.20 மீட்டர் அகலம் (23 அடி சாலையாகவும்) X வது (10-10) சாலையானது 7.20 மீட்டர் அகலம் (23 அடி சாலையாகவும்) XI வது (11-11) சாலையானது 7.20 மீட்டர் அகலம் (23 அடி சாலையாகவும்) XII வது (12-12) சாலையானது 7.20 மீட்டர் அகலம் (23 அடி சாலையாகவும்) மூலை முடக்குகள் உட்பட மொத்தம் 7170.16 சதுர மீட்டர் இடத்தினையும் பத்திரம் எண் : 781/2024 நாள்.14.02.2024-ம் தேதியில் மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடம் 123.14 சதுர மீட்டர் பத்திரம் எண் : 781/2024 நாள் : 14.02.2024-ம் தேதியில்** மதுரை மாவட்டம், மதுரை வடக்குப்பதிவு மாவட்டம், மதுரை வடக்கு 1நிர் இணை சார்பதிவகமாக இருந்து தற்போது விளாங்குடி சப்டி, மதுரை வடக்குதாலுகா, விளாங்குடி 2வது பிட் கிராமம், ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பதிந்த அசல் ஆவணங்கள் மற்றும் மனைப்பிரிவில் தார்சாலை அமைத்து அதன் புகைப்படம் ஆகியவற்றை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் உள்ளாட்சி அமைப்புக்கான இடங்களை மாநகராட்சி வசம் உள்ள சாலை பதிவேட்டில் பதிவு செய்ய (Road Register) UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்ததற்கும் காலிமனை வரிவிதித்ததற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 676**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**(ஒப்பம்) வ.இந்திராணி**

**மேயர்**

**மதுரை மாநகராட்சி**

**இடம்: மதுரை**

**நாள் : 24.10.2024**

# <u>மதுரை மாநகராட்சி</u>

## <u>மாமன்ற கூட்டம் நாள்: 24.10.2024</u>

## TABLE AGENDA

**ம2உ_3/006766/2022**

மதுரை மாநகராட்சியில் செப்டம்பர் 2022-ல் தென் மண்டல எம்.எஸ்.எம்.இ.(MSME) மாநாட்டின் போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மதுரையில் டைடல் பூங்காவிற்கும், மதுரை மாநகராட்சிக்கும் இடையே உருவாக்கப்பட்ட எஸ்.பி.வி (SPV) மூலம் டைடல் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவித்ததை தொடர்ந்து நகரளவை வார்டு எண்.16 பிளாக் எண்.65, நகரளவு எண்.5/1, 5/2-ல் உள்ள 5.60 ஏக்கர் நிலத்தினை TIDEL PARK திட்டத்திற்கு வழங்க மாமன்ற தீர்மானம் எண்.254 நாள்.26.06.2023-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

TIDEL PARK மேலாண்மை இயக்குநர் அவர்களிடமிருந்து 05.09.2024 அன்று அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் திருத்திய திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் TIDEL PARK மற்றும் மதுரை மாநகராட்சி ஆகிய இரு துறைகளுக்கும் SPV மூலம் நிறுவுவதற்கு அரசின் அனுமதி வழங்குமாறு கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.23048/2023/டிபி3 நாள்.17.10.2024-ல் அதற்கான மாமன்ற ஒப்புதல் பெற்று அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி மாமன்றத் தீர்மானம் எண்.512 நாள்.28.06.2024-ல் 5.60 ஏக்கர் நிலத்தினை SPV மூலம் 45 வருட குத்தகைக்கு TIDEL PARK நிறுவனத்திற்கு வழங்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்பொழுது கூடுதலாக 4.00 ஏக்கர் நிலத்தினை ஒதுக்கீடு செய்து மொத்தம் 9.60 ஏக்கர் பரப்பளவிற்கு கீழ்க்கண்டவாறு திருத்திய திட்ட மதிப்பீடு தயாரித்து வரப்பெற்றுள்ளது.

i. Land owned by Madurai Corporation to the extent of 9.60 acres shall be provided to the SPV on lease for 45 Years which is further extendable.

ii. The Lease rights for 45 years is Rs.74.31 crore (valued at 50% of the land cost of Rs.148.63 crore as earlier fixed by the District Collector at Rs.15.482 crores per acre)

iii. The Debit Equity shall be fixed as 80:20

iv. The total equity will be Rs.83.86 crore out of which the equity of TIDEL Park Ltd and Madurai Corporation will be Rs.42.77 crore and Rs.41.09 crore respectively in the ratio of 51.49.

v. The Leasehold value of the land after deducting the equity portion i.e.Rs.33.22 crore will be amortized over 45 years and shall be paid to Madurai Corporation annually.

vi. The leasehold value of the land after deducting the equity shall be treated as bebt which shall be amortized at an annual rate of 8%.

vii. The remaining Rs.335.46 crore (i.e.overall project cost of Rs.419.32 less total equity of Rs.83.86 crore) shall be funded by debit.

மேற்கூறிய திருத்திய திட்ட மதிப்பீட்டின்படி அரசின் அனுமதி பெற வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு

**மாமன்ற தீர்மானம் எண்: 677**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**(ஒப்பம்) வ.இந்திராணி**

**இடம்: மதுரை** **மேயர்**

**நாள் : 24.10.2024** **மதுரை மாநகராட்சி**